## SUBORDINATE COURT, PADMANABHAPURAM

## CASE NO.SC. 317 /2024

### Deposition of P.W. 1

Name : விஜு

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:10**.09.2025**

Accused Present.

முதல் விசாரணை–

நான் மணலிக்கரை கோதவிளையில் வசித்து வருகிறேன். இவ்வழக்கின் சாட்சியான தங்கமணி ராஜேந்திரனை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சாட்சி ராஜேந்திரன் எனது அப்பாவின் அக்கா மகன். 2வது எதிரி ராஜேந்திரனின் மனைவி. அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள். 1வது எதிரி , 2வது எதிரியுடன் கள்ள தொடர்பு வைத்திருந்தவர். 05.06.2024ம் தேதி மாலை 07.00 மணியளவில் கான்ட்ராக்டர் வீட்டிற்கு சம்பள பணம் வாங்குவதற்காக மணலிக்கரை சந்தை அருகே வந்த போது எதிரிகள் வந்தார்கள். சாட்சி ராஜேந்திரன் ஒரு வருடமாக எங்கு போனார் என்று 2வது எதிரியிடம் கேட்டார். அப்போது ராஜேந்திரனுக்கும், எதிரிகளுக்கும் சண்டை நடந்தது. 2வது, எதிரி 1வது எதிரியிடம் இனிமேல் இவன் உயிரோடு இருந்தால் வாழ முடியாது என்று சொன்னார்.

2வது எதிரி, 1வது எதிரியை பார்த்து கண்ணை காட்டவும் 1வது எதிரி சிவப்பு கலர் சில்வர் கத்தியால் இடது பக்க வயிற்றில் குத்தினார். குத்தியதில் குடல் வெளியே வந்து விட்டது. நான் தடுக்க சென்ற போது என்னை தள்ளி விட்டார்கள். 108 ஆம்புலன்சுக்கு போண் செய்து ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க நான்தான் புகார் கொடுத்தேன். புகார் மனு அ.சா.ஆ.1. போலீசார் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

புகாரில் சிவப்பு நிற கத்தியால் குத்தியதாக நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரிக்கும் போதும் சிவப்பு நிற சில்வர் கத்தியால் குத்தியதாக கூறவில்லை என்றால் சரியல்ல. எனது சகோதரர்கள் பெயர் பிபின், வினு. என் மீதும் எனது சகோதரர்கள் மீதும் குழித்துறை மகளீர் காவல்நிலையத்தில் பாலியல் பலாத்கார வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சாட்சி ராஜேந்திரன் மீது குமரி மாவட்டத்தில் பல்வேறு திருட்டு வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். ராஜேந்திரனுக்கும் 2வது எதிரிக்கும் இடையே குடும்ப தகராறு ஏற்பட்டு கொற்றிக்கோடு காவல்நிலையத்தில் பல புகார்கள் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 2வது எதிரிக்கு இரண்டும் பெண் குழந்தைகள் என்பதால் ராஜேந்திரன் 2வது எதிரியை அடித்து துன்புறுத்துவார் என்றால் இல்லை. காலை 05.00 மணிக்கு வேலைக்கு சென்று விட்டு மதியம் 01.00 மணிக்கு திரும்ப வந்து விட்டேன். 05.06.2024ம் தேதி ராஜேந்திரனை மாலையில் அவரது வீட்டில் வைத்து பார்த்தேன். அப்போது மாலை 03.00 மணி இருக்கும். மாலை 03.00

மணிக்கு ராஜேந்திரனை பார்த்ததை போலீசாரிடம் கூறவில்லை. கான்டிராக்டரை பார்க்க நாங்கள் நடந்து தான் போனோம். சம்பவ இடத்திலிருந்து எனது வீடு 500 மீட்டர் தூரம் இருக்கும். மணக்காவிளை மணலிக்கரை ரோடு எந்த திசையிலிருந்து, எந்த திசை பார்த்து செல்கிறது என்று எனக்குத் தெரியாது. மணலிக்கரையிலிருந்து மணக்காவிளை செல்லக்கூடிய சாலையில் வைத்து சம்பவம் நடந்தது. மணலிக்கரை சந்தை 04.00 மணியிலிருந்து 09.00 மணி வரை நடக்கும் என்றால் சரிதான். சந்தை பகுதியில் ஆட்கள் நடமாட்டம் மிகுதியாக இருக்கும் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த போது சுமார் 20, 30 பேர் கூடி இருப்பார்கள். சம்பவ இடத்தின் அருகே நிறைய கடைகள் உள்ள பகுதி என்றால் 5, 6 கடைகள் உள்ளது. சம்பவத்தின் போது ஒரு கடை தான் திறந்து இருந்தது. 108 ஆம்புலன்ஸ் வருவதற்காக அரை மணி நேரம் காத்திருந்தோம். காயம்பட்டவருக்கு முதலுதவி சிகிச்சை வழங்க கார்மல் மருத்துவமனைக்கு அழைத்து போனேன். அங்கு சிகிச்சை எதுவும் வழங்கவில்லை. கார்மல் மருத்துவமனைக்கு சென்ற விபரத்தை போலீசாரிடம் கூறவில்லை. ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு எப்போது சென்றோம் என்று ஞாபகமில்லை. நான், ரெஜு சிங், சுஜின் ஆகியவர்கள் ராஜேந்திரனை மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் போது உடன் இருந்தோம். 1வது எதிரி குத்தியதாக மருத்துவரிடத்தில் பெயர், விபரங்களை சொன்னோம். காயம்பட்டவரை மருத்துவமனையில் அனுமதிக்கும் போது என் பெயரை சொல்லி தான் அனுமதித்தேன். கொற்றிக்கோடு காவல்நிலைய போலீசார் எத்தனை மணிக்கு விபசாரித்தார்கள் என்று நேரம் தெரியாது. ஆனால் 05.06.2024ம் தேதி

இரவு போலீசார் வந்தார்கள். புகாரை நானே எழுதினேன். யாரும் சொல்லி கொடுக்கவில்லை. மறுநாளும் கொற்றிக்கோடு போலீசார் விசாரித்தார்கள். கொற்றிக்கோடு காவல்நிலையத்தில் வைத்து மறுநாள் விசாரித்தார்கள் என்றால் சரிதான். புகாரில் சுஜின் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தார். ராஜேந்திரன் 2 நாட்களில் சுயநினைவுக்கு வந்து விட்டார். சாட்சி ராஜேந்திரனை போலீசார் எப்போது விசாரித்தார் என்று எனக்குத் தெரியாது. ராஜேந்திரன் அவருடன் திருட்டு வழக்குகளில் உடந்தையாக இருந்த மணிகண்டன் என்பவரை குத்தியது குறித்து எனக்குத் தெரியாது. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும், காயம்பட்டவருக்கு குற்ற வழக்குகளில் தொடர்புடையவர்களால் காயம் ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. நான் காயம்பட்டவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னை தள்ளி விட்டு எதிரிகள் இருவரும் இருசக்கர வாகனத்தில் சென்று விட்டார்கள். இந்த விபரத்தை போலீசாரிடம் நான் கூறவில்லை. 2வது எதிரியுடன் கருத்து வேறுபாடு இருந்ததால் அவருக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 317 /2024**

**Deposition of P.W.** 2

Name : ராஜேந்திரன்

S/o, D/o, W/o : தங்கமணி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**10.09.2025**

Accused Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் மாறாங்கோணத்தில் வசித்து வருகிறேன். ஓட்டுனராக வேலை பார்க்கிறேன். 2வது எதிரி எனது மனைவி. 1வது எதிரியை தெரியும் பார்த்துள்ளேன். எனக்கு இரண்டு குழந்தைகள். எனது குழந்தைகளை பள்ளிக்கு கொண்டு சென்று விடும் போது எனது மனைவியான 2வது எதிரிக்கும். 1வது எதிரிக்கும் பழக்கம் ஏற்பட்டது. எனது மனைவியை ஒரு வருடமாக காணவில்லை. பின்னர் 05.06.2024ம் தேதி மாலை 07.00 மணிக்கு மணலிக்கரையில் மீன்விற்கும் சந்தை அருகே வைத்து 2வது எதிரியிடம் நீ எங்கு சென்றாய் என்று கேட்டேன். இவன் உயிருடன் இருந்தால் வாழ முடியாது கத்தியால் குத்து என்று 2வது எதிரி , 1வது எதிரியிடம் சொன்னார். 1வது எதிரி கத்தியால் எனது இடது பக்க வயிற்றில் குத்தி விட்டார். ஆம்புலன்சில் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு பிஜு அழைத்து சென்றார். இவ்வழக்கில் நடவடிக்கை எடுக்க பிஜு தான்

புகார் மனு கொடுத்தார். போலீசார் என்னை ஒரு வாரம் கழித்து விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என் மீது கொற்றிக்கோடு காவல்நிலையத்தில் இரண்டு வழக்குகள் உள்ளன. அந்த வழக்குகள் தற்போது நிலுவையில் உள்ளது. கருங்கல் காவல்நிலையத்தில் திருட்டு வழக்கு போட்டார்கள். அந்த வழக்கு முடிந்து விட்டது. ராஜாக்கமங்கலம் காவல்நிலையத்திலும் திருட்டு வழக்கு உள்ளது. ஆரல்வாய்மொழி காவல்நிலையத்தில் வழக்கு உள்ளது என்றால் சரியல்ல. பூதப்பாண்டி காவல்நிலையத்தில் வழக்கு இருந்ததா என்று எனக்குத் தெரியாது. ஆற்றூர் மணிகண்டன் என்பவரை தெரியும். திருட்டு தொழில் போட்டி சம்மந்தமாக மணிகண்டனை நான் குத்தினேன் என்றால் சரியல்ல. மணலிக்கரை மீன்சந்தை அருகே வரும் போது 2வது எதிரியிடம் ஒரு வருடமாக எங்கு சென்றாய் என்று கேட்டதை போலீசாரிடம் கூறவில்லை என்றால் சரியல்ல. மணக்காவிளையிலிருந்து – மணலிக்கரை நோக்கி வந்து கொண்டிருந்தோம். நாங்கள் நடந்து தான் வந்து கொண்டிருந்தோம். மணலிக்கரையிலிருந்து – சித்திரங்கோட்டிற்கு எந்த திசையில் செல்லாம் என்றால் இடது பக்கமாக செல்ல வேண்டும். மணலிக்கரை சந்தையிலிருந்து சித்திரங்கோடு 1 ½ கி.மீ தூரம் இருக்கும். 05.096.2024ம் தேதி நான் பிஜு வீட்டிற்கு செல்லவில்லை. அ.சா.1ஐ நான் மாலை 05.00 மணிக்கு பார்த்தேன். மணலிக்கரை சந்திப்பில் சாலை வேலை நடைபெற்று கொண்டிருந்தது என்றால் அப்போது பணி முடிந்து விட்டது. காமராஜர் நினைவு வளைவின் பக்கம் அதிக மீன் வியாபாரிகள் உண்டு என்றால் சரிதான். அலங்கார வளைவிற்கு எதிரே அதிக கடைகள் உள்ளது என்றால் சரிதான். மாலை 04.00 மணி முதல் இரவு 08.00 மணி

வரை அந்த இடத்தில் ஆட்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். காயம்பட்ட உடன் நான் கீழே இருந்தேன். சம்பவ இடத்தில் ரத்தம் பட்டது. சம்பவ நாளில் நான் சட்டை தான் போட்டிருந்தேன். என்ன கலர் சட்டை போட்டிருந்தேன் என்று ஞாபகமில்லை. சாரம் அணிந்திருந்தேன். ரத்தம் பட்ட சட்டை மற்றும் சாரத்தை போலீசார் கேட்கவில்லை. காயம்பட்ட உடன் அரை மணி நேரம் சுயநினைவு இருந்தது. கார்மல் மருத்துவமனைக்கு முதுலுதவி சிகிச்சை வழங்க அழைத்து போனார்கள். ஆனால் உள்ளே அனுமதிக்கவில்லை. போலீசாரிடம் கார்மல் மருத்துவமனைக்கு சென்ற விபரத்தை கூறவில்லை. ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு செல்லும் போதே சுயநினைவு இழந்து விட்டேன். எனக்கு சுயநினைவு வந்த பிறகு கொற்றிக்கோடு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. எனக்கும், 2வது எதிரிக்கும் திருமணம் நடந்த ஆண்டு ஞாபகமில்லை. 2வது எதிரியிடம் நான் வரதட்சணை எதுவும் பெறவில்லை. குடும்ப செலவிற்கு பணம் கேட்டும், வரதட்சணை கேட்டும் அவரை துன்புறுத்தினேன் என்றால் சரியல்ல. வழக்குகளில் இருந்து 2வது எதிரி தான் என்னை ஜாமீனில் எடுத்து வந்தார் என்றால் சரிதான். 2வது எதிரி என் மீது கொற்றிக்கோடு காவல்நிலையத்தில் ஒருமுறை புகார் கொடுத்தார். தனியே பிரிந்து வாழ்வதாக எழுதி வைத்து சென்று விட்டார் என்றால் சரியல்ல. 2வது எதிரி காணாமல்போய்விட்டதாக கொற்றிக்கோடு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். விசாரணையில் எனக்கும், 2வது எதிரிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று எழுதி வாங்கி கொண்டார்கள். எங்கள் திருமணத்தை பதிவு செய்யவில்லை. என்னை இவ்வழக்குகளில் இருந்து

பிணை எடுப்பதற்காக 1வது எதிரியின் துணையுடன் வந்ததை நான் சந்தேகப்பட்டு எனக்கு எங்கோ ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது பொய் வழக்கு போட்டேன் என்றால் சரியல்ல. சாலையில் குப்புற விழுந்து கம்பி குத்தி ஏற்பட்ட காயத்தை வைத்து பொய் வழக்கு போட்டேன் என்றால் சரியல்ல.